www.Padasalai.Net www.TrbTnpsc.com

VNR12His

விருதுநகர் மாவட்டம்
இரண்டாம் திருப்புதல் தேர்வு - 2024

வகுப்பு 12
வரலாறு

கால அளவு: 3.00 மணிநேரம் மதிப்பெண்கள்: 90

பகுதி - I

அனைத்து வினாக்களுக்கும் விடையளி. 20×1=20

1) 'சுயராஜ்யம் என்பது பிறப்புரிமை அதை அடைந்தே தீருவேன்' - எனக் கூறியவர்
அ) பாலகங்காதர திலகர் ஆ) தாதாபாய் நௌரோஜி
இ) சுபாஷ் சந்திர போஸ் ஈ) பாரதியார்

2) இந்திய தேசிய காங்கிரஸை நிறுவியவர்
அ) சுபாஷ் சந்திரபோஸ் ஆ) காந்தியடிகள்
இ) A.O.ஹியூம் ஈ) பாலகங்காதர திலகர்

3) "Indian Unrest" என்ற புத்தகத்தின் ஆசிரியர்
அ) லாலா லஜபதிராய் ஆ) வேலண்டைன் சிரோல்
இ) திலகர் ஈ) அன்னிபெசண்ட்

4) இந்தியாவின் மூவர்ணக் கொடி எப்போது ஏற்றப்பட்டது
அ) டிசம்பர் 31, 1929 ஆ) மார்ச் 12, 1930 இ) ஜனவரி 26, 1930 ஈ) ஜனவரி 26, 1931

5) பின்வரும் நிகழ்வுகளைச் சரியான காலவரிசைப்படி அமைத்து கொடுக்கப்பட்டுள்ள விடைகளிலிருந்து சரியானதைத் தேர்ந்தெடுக்கவும்.
i) கேதாசத்தியாகிரகம் ii) சம்பரன்இயக்கம்
iii) பிராமணரல்லாதார் இயக்கம் iv) வேதாரண்யம் உப்புச் சத்தியாகிரகம்
அ) ii, iii, i, iv ஆ) iii, ii, i, iv இ) ii, i, iv, iii ஈ) ii, i, iii, iv

6) காந்தியடிகளின் தண்டி யாத்திரை பயணம் சென்றடைந்த ஆண்டு
அ) ஏப்ரல் 6, 1930 ஆ) மார்ச் 6, 1930 இ) ஏப்ரல் 4, 1939 ஈ) மார்ச் 4, 1930

7) இந்திய கம்யூனிஸ்ட் கட்சி எந்த ஆண்டு தொடங்கப்பட்டது
அ) 1920 ஆ) 1925 இ) 1930 ஈ) 1935

8) பின்வருவோரில் கான்பூர் சதி வழக்கில் கைது செய்யப்பட்டவர் யார்?
அ) எம்.என். ராய் ஆ) பகத்சிங்
இ) எஸ்.ஏ.டாங்கே ஈ) ராம் பிரசாத் பிஸ்மில்

9) முகலாயர் காலத்தில் அலுவலக மற்றும் நீதிமன்ற மொழியாக விளங்கியது எது?
அ) உருது ஆ) இந்தி இ) மராத்தி ஈ) பாரசீகம்

10) இரு நாடு கொள்கையை முதன் முதலில் கொண்டுவந்தவர் ...........
அ) இராஜாஜி ஆ) ராம்சே மெக்டொனால்டு
இ) முகமது இக்பால் ஈ) சர்வாசிர் ஹசன்

11) **கூற்று** : பிரிட்டிஷ் அரசாங்கம் வகுப்பு வாதத்தை வளர்க்கவும் பரப்பவும் பின்பற்றியது தனித்தொகுதிக் கொள்கையாகும்
**காரணம்** : மக்கள் இரண்டு தனித்தொகுதிகளாக பிரிக்கப்பட்டதால் வகுப்புவாத அடிப்படையிலேயே வாக்களித்தார்
அ) கூற்று சரி, ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை
ஆ) கூற்று சரி, காரணம் தவறு
இ) கூற்று மற்றும் காரணம் தவறு
ஈ) கூற்று சரி, காரணம் கூற்றை விளக்குகிறது

12) இந்திய தேசிய இராணுவத்தின் பெண்கள் படைப்பிரிவின் பெயர் ............ ஆகும்
அ) சுபாஷ் படைப்பிரிவு ஆ) கஸ்தூர்பா படைப்பிரிவு
இ) கேப்டன் லட்சுமி படைப்பிரிவு ஈ) ஜான்சிராணி படைப்பிரிவு

13) பிரிட்டிஷார் எந்தக் காலத்திற்குள் இந்தியாவை விட்டு வெளியேற முடிவு செய்தனர்?
அ) ஆகஸ்ட் 15, 1947 ஆ) ஜனவரி 26, 1950
இ) ஜூன் 1948 ஈ) டிசம்பர் 1949

14) ஆந்திர மாநில கோரிக்கையினை முதன் முதலில் எழுப்பியவர்
அ) பொட்டி ஸ்ரீராமுலு ஆ) பட்டாபி சீத்தாராமையா
இ) கே.எம். பணிக்கர் ஈ) டி.பிரகாசம்

15) மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதியளிப்புச் சட்டம் (MGNREGA) எத்தனை நாட்கள் வேலைவாய்ப்பை ஒரு தனிநபருக்கு வழங்குகிறது?
அ) 200 ஆ) 150 இ) 100 ஈ) 75

16) காந்தியடிகளின் அரசியல் குரு யார்?
அ) திலகர் ஆ) கோகலே இ) W.C.பானர்ஜி ஈ) M.G.ரானடே

17) கீழ்கண்டவற்றுள் எது லியானர்டோ டாவின்சியின் ஓவியம் இல்லை
அ) வர்ஜின் ஆஃப் தி ராக்ஸ் ஆ) இறுதி விருந்து
இ) மோனலிசா ஈ) மடோனாவும் குழந்தையும்.

18) வட அமெரிக்காவில் முதன் முதலில் குடியேறிய ஐரோப்பியர்கள்
அ) போர்த்துக்கீசியர் ஆ) ஸ்பானியர் இ) டேனியர் ஈ) ஆங்கிலேயர்

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

19) பன்னாட்டு சங்கம் .......... ஆம் ஆண்டு கலைக்கப்பட்டது.
அ) 1939 ஆ) 1941 இ) 1945 ஈ) 1946

20) பேர்ல் துறைமுகத்தை ஜப்பான் தாக்குவதற்கு திட்டம் வகுத்தவர் .......... ஆவார்
அ) யாமமோடோ ஆ) ஸ்கூஸ்னிக்
இ) இரண்டாம் கெய்சர் வில்லியம் ஈ) ஹிரோஹிடோ

## பகுதி - II

**எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளி. (வினா எண்: 30 கட்டாய வினா)** **7×2=14**

21) இல்பர்ட் மசோதாவின் முக்கியத்துவத்தை விவரி.
22) புதிய நிலவுடைமை உரிமைகளால் ஏற்பட்ட பாதிப்புகளை எழுதுக.
23) பிரிட்டிஷ் இந்தியாவில் தீவிர தேசியவாதிகளின் மையமாக விளங்கிய தலைவர்களைக் கண்டறிக.
24) கிலாஃபத் இயக்கம் துவங்குவதற்கான பின்னணி என்னவாக இருந்தது?
25) தேசியவாதிகளால் ரௌலட் சட்டம் ஏன் எதிர்க்கப்பட்டது?
26) இரண்டாவது லாகூர் சதி என்றறியப்படும் நிகழ்வு யாது?
27) பூமிதான இயக்கம் பற்றி எழுதுக.
28) பிளாரன்ஸின் மெடிசி குடும்பம் பற்றி குறிப்பு வரைக.
29) 'மூவர் தலையீடு' எனப்படுவது யாது?
30) பாஸ்டன் தேநீர் விருந்து குறித்து நீங்கள் அறிந்ததென்ன?

## பகுதி - III

**எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளி. (வினா எண்: 40 கட்டாய வினா)** **7×3=21**

31) மெக்காலேயின் 'இந்தியக்கல்வி குறித்த குறிப்புகளை ஆய்க
32) வ.உ.சிதம்பரத்தின் சுதேச இயக்க முயற்சிகள் குறித்து எழுதுக.
33) தன்னாட்சி இயக்கத்தின் இரட்டைக் குறிக்கோள்கள் எழுதுக.
34) ஜாலியன் வாலாபாக் படுகொலை குறித்து குறிப்பு வரைக.
35) சிட்டகாங் ஆயுதப்படைத் தாக்குதலை நடத்த சூரியாசென் எவ்வாறு திட்டமிட்டார்?
36) கலெக்டர் ஆஷ் ஏன் வாஞ்சிநாதனால் கொல்லப்பட்டார்
37) இந்திய அரசியலமைப்பின் தனித்தன்மைகள் யாவை?
38) மறுமலர்ச்சியின் தாயகமாக இத்தாலி விளங்கியது ஏன்?
39) நேட்டோ உருவாக்கப்பட்டதின் பின்னணியைக் கண்டறியவும்.
40) இரண்டாம் உலகப்போரின் முக்கிய விளைவுகளை முன்னிலைப்படுத்துக.

## பகுதி - IV

**அனைத்து வினாக்களுக்கும் விடையளி.** **7×5=35**

41) அ) பிரிட்டிஷ் இந்தியாவில் தேசிய உணர்வு தோன்ற காரணமான சமூகப் பொருளாதாரக் காரணிகளை ஆய்க **(அல்லது)**
ஆ) வெள்ளையனே வெளியேறு இயக்கத்தின் போக்கினை விவாதிக்கவும்

42) அ) இராஜாஜி திட்டம் பற்றி எழுதுக. **(அல்லது)**
ஆ) தமிழ்நாட்டில் சுதேசி இயக்கத்தின் செயல்பாடுகள் குறித்து எழுதுக.

43) அ) முதல் இரண்டு ஐந்தாண்டுத்திட்டங்களின் சாதனைகளை மதிப்பிடுக. **(அல்லது)**
ஆ) மலபார் மாப்பிள்ளை கிளர்ச்சியின் காரணங்கள் மற்றும் துயர விளைவுகளைப் பற்றி விவரிக்கவும்

44) அ) இந்திய விடுதலைப் போரில் மகாத்மா காந்தியடிகளின் பங்கினை மதிப்பிடுக. **(அல்லது)**
ஆ) ஒத்துழையாமை இயக்கத்தை நடைமுறைப்படுத்தும் சூழலையும் அதன் விளைவுகளையும் விவரிக்கவும்.

45) அ) அமெரிக்க விடுதலைப் போருக்கான காரணங்கள் அதன் போக்கு விளைவுகள் குறித்து எழுதுக. **(அல்லது)**
ஆ) தொழிற்புரட்சி ஏன் முதலில் இங்கிலாந்தில் தொடங்கிற்று? நவீன சமூகத்தின் மீது அது என்ன தாக்கத்தை ஏற்படுத்தி உள்ளது?

46) அ) முதல் உலகப் போருக்கான காரணங்களையும், விளைவுகளையும் கணக்கிடுக. **(அல்லது)**
ஆ) **இந்திய தேசிய இயக்கம் நடைபெற்ற கீழ்க்கண்ட இடங்களை இந்திய வரைபடத்தில் குறிக்கவும்.**
i) சௌரி சௌரா ii) கொல்கத்தா iii) டில்லி iv) வேதாரண்யம் v) தண்டி

47) அ) இரண்டாம் உலகப் போர் ஏற்பட ஜெர்மனியும் ஹிட்லரும் எந்த அளவிற்கு காரணமானவர்கள் என்பதனை ஆய்ந்து கூறுக. **(அல்லது)**
ஆ) கி.பி.1920 முதல் கி.பி.1950 வரையிலான இந்திய தேசிய இயக்கத்தில் ஏதேனும் ஐந்து முக்கிய நிகழ்ச்சிகளை காலக்கோடு வரைந்து காட்டுக.

- - - - - -

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com